356

இரு பெருமக்கள்

155

ACL-THAL 00065

OFFICE OF THE REGISTRAR
18 APR 1929

கு. மதுரை முதலியார் அவர்கள்

[படங்களுடன்]

சென்னை

ப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட்

1929

N29

இரு பெருமக்கள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
18 APR 1929.
MADRAS

ஆசிரியர்

தமிழ்ப்புலவர்

கு. மதுரை முதலியார் அவர்கள்

[படங்களுடன்]

சென்னை

இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட்

1929

விலை அணா 3]

உரிமையுடையது

ஸ்ரீ

முன்னுரை.

அறிஞர் பலர், பள்ளிக்கூடத்து மாணவர்க்கு உப பாடமாகப் பயன்படும் வண்ணம் பல்வேறு வகையில் பற்பல புத்தகங்களை யெழுதி வருகின்றனர். நந்தம் தமிழ் நாட்டு மாணவர் இளமையிலிருந்தே உண்மைச் சரிதங்களைப் படித்துக் கொண்டுவரின், அவர்களின் வாழ்க்கை மிக்க உன்னத நிலையை யடையும் என்பது எனது மனக்கோள். அதுபற்றியே யான் பல நாட்டுச் சரிதங்களை உப பாடமாகத் தண்டமிழில் எழுதத் துணிந்துளேன். அங்ஙனம் துணிந்துள்ள யான் பல்வகையில் பன்னாட்டிலும் சிறந்தோளிரும் நம் இந்திய நாட்டுச் சரிதத்தை முப்பகுதியாகப் பகுத்து வரையத் துணிந்தேன். அம் முப்பகுதியுள் இது முற்பகுதியாகும். இதனுள் யான் இராமரது இனிய சரிதத்தையும் புத்தரது அரிய சரிதத்தையும் மிகச் சுருக்கி வரைந்துளேன். இப்பகுதியை முட்டின்றி முடிப்பித்த முழுமுதற் பரம்பொருள் ஏனைய பகுதிகளையும் அங்ஙனமே முடித்து வைக்குமாறு அவர் திருவடிக் கமலங்களை வழுத்துகின்றேன்.

இங்ஙனம்,

கு. ம.

PENROSE & Co.
GENERAL PRINTERS,
BINDERS &c.
MADRAS

இரு பெரு மக்கள்

ஸ்ரீ

இராமர்

உலகம் ஒன்பது பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. அவ்வொன்பதில் நாம் ஒரு பாகத்தில் வாழ்கிறோம். நாம் வாழும் இப் பாகத்தின் பெயர் பரத கண்டம். இக் கண்டத்தில் பல சிறந்த நாடுகள் இருந்தன. அவற்றுள் கோசல நாடு என்பது ஒன்று. அந் நாடு மிக்க வளமுடையது. சரயு வென்னும் நதி அந் நாட்டில் இடையறாமல் ஓடிக்கொண்டிருக்கும்.

இப்படி யழகு பெற்றிருந்த கோசல நாட்டில் அயோத்தி யென்னும் அழகிய நகர் ஒன்று உண்டு. தசரதர் என்னும் ஓர் அரசர் அந் நகரிலிருந்து அரசு செய்துவந்தார். அவ்வரசர் குடிகளிடத்தில் மிக்க அன்புள்ளவர். அவருக்கு மூன்று மனைவியர் இருந்தனர். அவர்களுள் முதல் மனைவியின் பெயர் கோசலை. இரண்டாம் மனைவியின் பெயர் கைகேயி. மூன்றாம் மனைவியின் பெயர் சுமித்திரை. தசரதர் தம்முடைய மனைவிமார் மூவரில் கைகேயியிடம் மிக்க அன்பு காட்டி வந்தார்.

தசரதர், நீண்ட நாள் வரைக்கும் பிள்ளை இல்லாக் குறையால் மனம் வருந்தி யிருந்தார். பல வருடங்களுக்குப் பின், கோசலை இராமரை யும், கைகேயி பரதனையும், சுமித்திரை இலக்கு மணன், சத்துருக்குனன் என்னும் இருவரையும் பெற்றெடுத்தனர். குழந்தைகள் இல்லை யென்று மனம் வருந்திய தசரதர், அழகிய நான்கு குழந்தைகளைக் கண்டு ஆநந்தங்கொண்டார்.

தசரதருடைய நான்கு பிள்ளைகளும் நாளுக்கு நாள் அழகுடன் வளர்ந்து வந்தனர். தசரதர் தம்முடைய நான்கு பிள்ளைகளில் இராமரிடம் பேரன்பு காட்டி வந்தார். இராமரும் இலக்கு மணனும் இணை பிரியாமல் விளையாடி வந்தனர். அது போலவே பரதனும் சத்துருக்குனனும் ஒன்று சேர்ந்து விளையாடிக் களித்து வந்தனர்.

இராமர் நல்ல குணங்கள் பொருந்தியவர். பெற்றோர் சொற்படி நடக்க வேண்டுமென்பது அவரது எண்ணம். அவர், பிறர் மனம் வருந்தும் படி ஒரு காரியத்தையுஞ் செய்யார். பெரியோ ரிடத்தில் பேரன்பு அவருக்குண்டு. நல்ல காரியங் களைச் செய்யவேண்டு மென்றே அவர் மனம் நாடும். அவர் முகம் எப்பொழுதும் புன் சிரிப் புடனே விளங்கும். ஆகையால், அவரிடம் எல்லோரும் பேரன்பு காட்டி வந்தனர்.

இரண்டாம் பிரிவு.

மக்களைப் பெற்று மன மகிழ்வுடன் வாழ்ந்து வரும் தசரதர், ஒரு நாள் சிங்காதனத்தில் அமர்ந்திருந்தார். அவர் பக்கத்தில் வசிட்டர் முதலிய மாதவரும், சுமந்திரன் முதலிய மந்திரிமார்களும் அவரவர்க்குரிய இருக்கைகளில் அமர்ந்திருந்தனர். அப்பொழுது விசுவாமித்திரர் என்னும் அருந்தவர் ஒருவர் அவ்விடம் வந்தார். அப் பெரியாரைக் கண்ட தசரதர், சிம்மாதனத்திலிருந்து இறங்கி வந்து, அம் முனிவரை வணங்கி, அவரை ஓர் ஆதனத்தில் இருக்கும்படி வேண்டினர்.

பின்பு, தசரதர், விசுவாமித்திரரைப் பார்த்து, "மாதவரே, நீங்கள் இவ்விடம் வந்ததற்குக் காரணம் என்னுடைய முன்னோர் செய்துள்ள பெருந்தவப் பயனே யென்று எண்ணுகின்றேன். உமக்கு என்னால் செய்யக் கூடிய உதவி யாதேனும் இருந்தால் சொல்லுங்கள். யான் அதனை யுடனே செய்கின்றேன்," என்று வணக்கத்துடன் கேட்டார்.

தசரதருடைய அன்பார்ந்த சொற்கள் விசுவாமித்திரர்க்கு ஆநந்தத்தைக் கொடுத்தன. ஆகையால், அம் முனிவர் தாம் எண்ணி வந்த காரியம் முடிவு பெறும் என்று களிப்படைந்தார். பின்பு, அம் முனிவர், தசரதரைப் பார்த்து, "அரச, நெடு நாட்களாக யான் செய்துவரும் யாகத்திற்குச் சில அரக்கர் இடையூறு செய்து வருகின்றனர். அவர்களைக் கொன்று, என்னுடைய யாகத்தை முடித்து வைக்க உன்னுடைய

குமாரர்களில் கரு நிறமுடைய இராமனை என்னுடன் அனுப்புவாய்," என்று கேட்டார்.

விசுவாமித்திரர் கூறிய சொற்கள் தசரதர் மனத்தை மிகவும் வருத்தின. தசரதர் சிறிது நேரம் ஒன்றும் பேசாமல் அசைவற்று இருந்தார்; பின்பு, முனிவரைப் பார்த்து, "முனிவரே, இராமன் சிறியன். அரக்கருடன் நின்று போர் புரியும் சக்தி அவனுக்கில்லை. ஆகையால், யான் உம்முடன் வந்து உமது யாகத்தைக் கெடுக்கும் அரக்கரைக் கொன்று, உமது காரியத்தை முடித்து வைக்கின்றேன்," என்று சொன்னார்.

தசரதர் சொன்ன சொற்கள் விசுவாமித்திரர்க்குப் பெருங் கோபத்தை யுண்டாக்கின. முனிவரது கோபத்தால் யாது விளையுமோவென அங்கிருந்தோரெல்லாம் நடுங்கினர். விசுவாமித்திரர் இருந்த விடத்தினின்றும் எழுந்தார். அப்பொழுது அங்கிருந்த வசிட்ட முனிவர், விசுவாமித்திரரைக் கையமர்த்தி, தசரதரை நோக்கி, "அரச, நீ மனம் வருந்தாமல் இராமனை விசுவாமித்திரருடன் அனுப்புவாய். இராமன் அம்முனிவருடன் சென்றால், பல நன்மைகளைப் பெற்று வருவான்," என்றார். வசிட்டரின் சொற்படித் தசரதர், இராமரை யழைத்து, விசுவாமித்திரருடன் போய் அவர் செய்யும் யாகத்தை நிறைவேற்றி விட்டு வரும்படி கட்டளையிட்டார். இலக்குமணனும் இராமரைத் தொடர்ந்து செல்லத் துணிந்தான்.

விசுவாமித்திரர் பேரானந்தத்துடன் வசிட்டர், தசரதர் முதலியோரிடம் உத்தரவு பெற்று, இராம இலக்குமணருடன் தசரதர் சபையை விட்டு நீங்கினர். பின்னர், அம்முனிவர், இராம

இலக்குமணருக்கு இரண்டு மந்திரங்களை யுபதேசித்தருளினர். அவ்வரசிளங் குமரர் இருவரும் அம்மந்திரங்களின் சக்தியால் பசி யிளைப்பு முதலியவற்ருல் சிறிதும் வருந்தாமல் முனிவருடன் ஒரு பாலை வனத்தின் வழியே சென்று கொண்டிருந்தனர்.

அப்பொழுது, விசுவாமித்திரர், அப் பாலை வனத்திலுள்ள தாடகை யென்னும் அரக்கி தாம் செய்யும் யாகத்தைக் கெடுக்கும் விதத்தை இராமரிடம் கூறினர்.

விசுவாமித்திரர், இராமரிடம் அவ்வாறு கூறிக்கொண்டிருந்த பொழுது, தாடகை யென்னும் கொடிய அரக்கி, பயங்கரமான வடிவுடன் இராமரை யெதிர்க்க வந்தாள். தாடகை நெருங்கி வருவதைக் கண்ட இராமர், பெண் கொலை செய்தல் சரியன்று என்றெண்ணி ஒன்றும் செய்யாமல் இருந்தார். இராமரது உள்ளக் குறிப்பை யுணர்ந்த விசுவாமித்திரர், "இராம, இக் கொடியாளை நீ பெண்ணென்று எண்ண வேண்டா. இவள் இவ் வுலகிலுள்ள நல்லோரை யெல்லாம் அழித்துத் திரிகின்ருள். இவளைக் கொல்லுவதால் உனக்கு அழியாப் புகழே யுண்டாகும்," என்று கூறிக் கொண்டிருக்கும் பொழுதே தாடகை யென்னும் அரக்கி இராமர் மீது தனது சூலத்தை எறிந்தாள். உடனே இராமர், 'இனி நாம் சும்மா இருப்பின், நமக்கும் முனிவருக்கும் தீங்கு உண்டாகும்,' என்று எண்ணி, அவ்வரக்கி யெறிந்த சூலத்தை ஒரு கணையால் இரண்டு துண்டுகளாக்கி, அவள் மார்பிற்குக் குறி வைத்து மற்ருெரு கணையை விட்டார்.

இராமர் விட்ட அம்பு, குறி தப்பாமற் சென்று, தாடகையின் மார்பில் பாய்ந்து, ஊடுருவிச் சென்றது. தாடகை, மலைபோல் மண்மீது சாய்ந்து உயிர் விட்டாள். அக் கொடிய அரக்கி இராமரது ஒரே அம்பால் இறந்ததைக் கண்ட பலரும் ஆநந்த மடைந்தனர். விசுவாமித்திரர் இராமரை மார்புறத் தழுவி மகிழ்ந்தார்.

பின்பு, விசுவாமித்திரர், இராம இலக்குமணருடன் தமது இருப்பிடஞ் சென்று யாகத்தைச் செய்து முடிக்கத் தொடங்கினர். அந்த யாகத்தை இராம இலக்குமணர் இருவரும் கண்களைக் காக்கும் இமைகளே போல் மிக்க கவலையுடன் காத்திருந்தனர். அப்பொழுது தாடகையின் புதல்வர்களாகிய மாரீசன், சுபாகு என்னும் இருவரும் பல அரக்கருடன் வந்து முனிவர் செய்யும் யாகத்தை யழிக்க முயன்றனர். உடனே இராமர் ஓர் அம்பால் மாரீசனைக் கடலுள் அழுத்தி, மற்றோர் அம்பால் சுபாகுவையும் அவனுடன் வந்த பல அரக்கர்களையும் கொன்றனர். பின்பு, விசுவாமித்திரர் தாம் ஆரம்பித்த அரிய யாகத்தை முடித்து ஆநந்தக் கடலுள் ஆழ்ந்தார்; இராம இலக்குமணர் இருவருக்கும் பல ஆசிகள் கூறி அவர்களை மார்புறத் தழுவி மன மகிழ்ந்தார்.

மூன்றாம் பிரிவு.

மிதிலை யென்னும் ஓர் அழகிய நகரம் இருந்தது. அந் நகரத்தில் சனகன் என்னும் ஒரு சிறந்த அரசன் இருந்து நீதி தவறாமல் அரசாண்டு வந்தான். அவனுக்குச் சீதை யென்னும் பெண் ஒருத்தி யிருந்தாள். அவள் அழகிலும் குணத்திலும் சிறந்திருந்தமையால், அவளை யாருக்கு மணஞ் செய்து கொடுப்பது என்ற ஏக்கம் அவளுடைய தந்தையின் மனத்தில் குடிகொண்டிருந்தது.

சீதையின் கலியாணத்தைப் பற்றிச் சனகன் பல நாள் எண்ணிவந்தான். ஒரு நாள், அம் மன்னவனுக்கு ஒரு யோசனை பிறந்தது. அவ் வரசனிடத்தில் ஒருவரும் தூக்க முடியாத ஒரு சிறந்த வில் இருந்தது. அந்த வில்லை எந்த அரசன் தூக்கி முறிக்கின்றானோ அவனுக்கே சீதையைக் கொடுக்கலாம் என்று அம் மன்னவன் துணிந்தான்.

சனகன் தான் துணிந்ததை எல்லா அரசர்க்கும் தெரிவித்தான். சீதையின் அழகையும், நல்ல குணங்களையும் கேட்டு மன மயங்கியிருந்த கணக்கற்ற அரசர்கள், சனகன் அரண்மனைக்கு வந்து, சீதையின் விவாக நிமித்தம் வைக்கப் பட்டிருந்த வில்லை முறிக்க முயன்றனர். ஆனால், அவர்கள் முயற்சி யாவும் வீணாயின.

சனகன், சீதையின் விவாகத்திற்காக வைத்திருக்கும் வில்லைப் பற்றி விசுவாமித்திரரும் கேள்வியுற்றிருந்தார். ஆகையால், அவ் வில்லை முறிக்கக் கூடியவர் இராமர் ஒருவரே என்பது அம் முனிவரின் ஞாபகத்திற்கு வந்தது. உடனே

அம் முனிவர், இராம இலக்குமணருடன் மிதிலை நோக்கிச் சென்றார்.

விசுவாமித்திரரைக் கண்ட சனகன் அளவிலாத ஆநந்த மடைந்து, அம் முனிவரை வணங்கி, அவர்க்கும் அவருடன் வந்த இளைஞர் இருவர்க்கும் இருப்பதற் கேற்ற இருக்கைகள் இட்டனன். பின்னர், அம் மன்னவன் முனிவருடன் பற்பலவற்றைப் பற்றிப் பேசினன்.

பின்பு, விசுவாமித்திரர், சனகனைப் பார்த்து, "மன்னவ, இவர்கள், அயோத்தி நகரத்தில் இருந்து அரசு செய்து வரும் தசரத மன்னனுடைய மைந்தர்கள். இவர்களின் பெயர் இராம இலக்குமணர் என்று சொல்லுவர். இவ்விருவரில் மூத்தோனாகிய இராமன் வில் வித்தையில் மிக்க தேர்ச்சி யுள்ளவன். நீ சீதையின் பொருட்டு வைத்திருக்கும் வில்லைக் காண்பதற்கே அவன் என்னுடன் இங்கு வந்துளான்," என்றார்.

இராமரது அழகையும், தேக அமைப்பையுங் கண்ட சனகன், 'இவனே சீதைக் கேற்ற மணவாளன்,' என்று தனக்குள்ளே யெண்ணினான். பின்பு, அம் மன்னவன், வேலையாளரை யழைத்து, சீதையின் திருமணத்திற்கென வைக்கப்பட்டிருக்கும் அவ் வில்லைக் கொண்டு வரும்படி கட்டளையிட்டான். உடனே, அப் பணியாளர், விரைந்து சென்று, மிக வருந்தி, அவ் வில்லைக் கொண்டு வந்து அரசன் முன் வைத்தனர்.

அப்பொழுது, விசுவாமித்திரர், இராமனைப் பார்த்து, "ஐய, இவ் வில்லைப் பார். இதனை

யுனக்குக் காண்பிக்கும் பொருட்டே யுன்னை யிங்கு யான் அழைத்து வந்தேன்,” என்று கூறினார்.

விசுவாமித்திரர் சொல்லிய குறிப்புரைகளைக் கேட்ட இராமர், புன்சிரிப்புடன் எழுந்து, வில்லின் அருகு போய், அப் பெரிய வில்லை வருத்தமின்றி ஒரு கையால் எடுத்து, ஒரு கணத்தில் முறித்து நின்றார். இராமரால் முறிக்கப்பட்ட வில்லின் ஓசையைக் கேட்ட அவ் வூர் மக்கள் அனைவரும் சிறிது நேரம் நடுங்கி நின்றனர். இராமரது தோள் வலியைக் கண்ட சனகன் பெரு வியப்புற்றான். விசுவாமித்திரரது உடல் ஆநந்தத்தால் பூரித்தது.

பின்பு, சனகன், இராமர் வில் முறித்ததையும், தான் இராமருக்குச் சீதையை மணஞ்செய்து கொடுக்கத் தீர்மானித்துள்ளதையும், அந் நல்ல காரியம் நடக்கும் நாளையும் ஓர் ஓலையில் எழுதி, ஒரு தூதுவனிடம் அவ்வோலையைக் கொடுத்துத் தசரத மன்னரிடம் அதனைக் கொடுக்கும்படி அத் தூதுவனை யனுப்பினான். மங்கள வோலையைக் கைக் கொண்ட தூதுவன், காற்றினும் விரைந்து போய்த் தசரதரிடம் அவ் வோலையைக் கொடுத்தான்.

தசரதர் ஓலைச் சுருளைப் பிரித்து, அதனில் எழுதியிருந்தவற்றைப் படித்து, அளவிலாத ஆநந்தமடைந்தார்; அவ் வோலையைத் தம்முடைய அருமை மனைவிமாரிடம் காட்டினார். அவர்களும் ஆநந்த மடைந்தனர். இராமர் கலியாணத்தைக் கேட்ட மாந்தர் அனைவரும் பெரு மகிழ்ச்சி யடைந்தனர்.

தசரதர், நால்வகைப் படையுடனும், மற்றையோருடனும் புறப்பட்டு மிதிலை போய்ச் சேர்ந்தார். சனகன், தசரதரை யெதிர்கொண்டழைத்து,

அம் மன்னருக்குச் செய்ய வேண்டிய மரியாதை களைச் செவ்வனம் செய்தான். பின்பு, குறித்த நாளில் இராமருக்கும் சீதைக்கும் திருமணம் நடந்தது.

சனகனுக்குக் குசத்துவசன் என்னும் பெயரையுடைய ஒரு தம்பி உண்டு: அம் மன்னனுக்கு மாண்டவி, ஊர்மிளை, சுருதகீர்த்தி யென்னும் மூன்று பெண்கள் இருந்தார்கள். சனகன் அவர்களில் மாண்டவியைப் பரதனுக்கும், ஊர்மிளையை யிலக்குமணனுக்கும், சுருதகீர்த்தியைச் சத்துருக்குனனுக்கும் கலியாணம் செய்வித்தான்.

தசரதர், புத்திரர்களையும் மருமக்கள்மாரையுங் கண்டு களிப்படைந்தார். சீதை, இராமரது அழகைக் கண்டு ஆநந்தங் கொண்டாள். சனகன், தன்னுடைய பெண்களுக்குத் தகுந்த மாப்பிள்ளைகளைக் கண்டு பேராநந்தம் அடைந்தான்.

தசரதர் சில நாள் மிதிலா நகரத்தில் தங்கியிருந்தார். பின்பு, அம் மன்னவர், சனகனிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு, மைந்தர்களுடனும் மற்றையோருடனும் அயோத்தி வந்து சேர்ந்தார்.

நான்காம் பிரிவு.

இராமருடைய நல்ல குணங்களையும், அவர் மனைவியாகிய சீதையின் சிறந்த குணங்களையுங் கண்ட குடிகள், 'தசரத மன்னர் செய்த தவம் தான் சிறந்த தவம்,' என்று சொல்லி மகிழ்ந்தனர். இராமரும் சீதையும், உலகினர் கண்டு புகழும்படி வாழ்ந்து வந்தனர்.

சில நாட்கள் கழித்து, பரதன், சத்துருக்குன னுடன் தன் பாட்டனரான கேகய மன்னரைக் காணக் கேகய நாட்டிற்குச் சென்முன். பிறகு, ஒரு நாள், தசரதர், சபையில் இருந்த பெரியோர் களைப் பார்த்து, "அறிவுடையீர், யான் இவ் வுலகை நீண்ட நாட்களாக ஆண்டுவருகின்றேன். இனி யிவ்வுலகை யாள எனக்கு விருப்பமில்லை. என்னுடைய மைந்தர்களில் பெரியோனுகிய இராமனுக்குத் திருமுடி சூட்டி, அவனையே இந் நாட்டிற்கு அரசனுக்க விரும்புகின்றேன். இது சம்பந்தமாக உமது மனதிற் படுவதை யொளி யாது சொல்லுங்கள்," என்றுர்.

இராமருக்குத் திருமுடி சூட்ட எண்ணியிருப்ப தாகத் தசரதர் கூறியதைக் கேட்ட சபையினர் அளவிலாத ஆநந்தமடைந்தனர். பின்பு, அவர் கள், தசரத மன்னரை நோக்கி, "மா நிலங் காக் கும் மன்னரே, உமக்குப் பின் இந் நாட்டைக் காக்க இராமனைக் காட்டிலும் சிறந்தவன் ஒரு வன் உளனு? இராமனுடைய நற்குண நற்செய் கைகள் இவ் வுலகிலுள்ள எல்லோருடைய மனங் களையும் கொள்ளை கொண்டிருக்கின்றன. நீங்கள் உம்முடைய அருமைப் புதல்வனுகிய இராமனுக்

குத் திருமுடி சூட்டுவீராஞல், இவ் வுலகமே மகிழும்," என்ருர்கள்.

கோசல நாட்டுக் குடிகள் இராமரிடத்துப் பேரன்புடையவர்களாக இருக்கின்ருர்கள் என்பதை யுணர்ந்த தசரதர், கரை கடந்த களிப்படைந்தார். பின்பு, அம் மன்னவர், தம்முடைய மந்திரிமார்களில் சிறந்தவஞகிய சுமந்திரனைப் பார்த்து, இராமரை யழைத்து வரும்படி கட்டளையிட்டார். உடனே சுமந்திரன் விரைந்து போய் இராமரை யழைத்து வந்து நின்ருன்.

இராமர் தசரத மன்னரை வணங்கி நின்ருர். உடனே தசரதர், இராமரை யிரு கைகளாலும் மார்புறத் தழுவிக் கொண்டார். பின்பு, தசரதர், இராமரைப் பார்த்து, "மைந்த, யான் உனக்குத் திருமுடி சூட்டி, உனது அரசாட்சியைக் கண்ணுரக் கண்டு களிப்படைய விரும்புகின்றேன்," என்ருர். இராமர், பிதாவை வணங்கி, "தந்தையீர், உமது கருத்தின்படி செய்யுங்கள்," என்று சொல்லிவிட்டுத் தந்தையிடம் உத்தரவு பெற்று அரண்மனைக்குச் சென்ருர்.

இராமர் சபையை விட்டு நீங்கிய பின்பு, தசரத மன்னர், சபையில் இருந்தவர்களைப் பார்த்து, "நீங்கள் சென்று உங்களுடைய வீடுகளை யெல்லாம் அலங்கரியுங்கள். இராமனுக்கு யான் திருமுடி சூட்ட நிச்சயித்திருப்பதை உம்முடைய சிநேகர்க்கும் உறவினர்க்கும் தெரிவியுங்கள்," என்ருர். பின்னர், அம் மன்னவர், யானையின் மேல் ஏறி, முரசு அறைந்து, இராமரது பட்டாபிஷேக நாளை நாட்டிலுள்ள அனைவர்க்கும் தெரிவிக்கும்படி வள்ளுவனுக்குக் கட்டளையிட்டார்.

அயோத்திமா நகர மக்கள் இராமரது பட்டாபிஷேகத்தைக் கேட்டு, மேகத்தைக் கண்ட மயிற் கூட்டங்களைப்போல் கரை கடந்த களிப்படைந்தனர்; வீடுகளையும் வீதிகளையும் அழகு பெற அலங்கரித்தனர்; பல இடங்களிலும் ஓடினர்; குதித்தனர்; பாடினர்; இராமருடைய பெயரைப் பல முறை கூறிக் கூத்தாடினர்.

மந்தரை யென்னும் பெயரை யுடைய கூனி யொருத்தி கைகேயி அரண்மனையில் வேலைக்காரியாய் இருந்தாள். இராமர் தமது இளமைப் பருவத்தில், அக் கூனியின் முதுகிற்குக் குறி பார்த்து உண்டை வில்லால் அடித்து விளையாடி வந்தார். அவ் விளையாட்டே அவருக்கு வினையாய் முடிந்தது.

மந்தரை யென்பாள், 'தசரதர் இராமனுக்குத் திருமுடி சூட்டப் போகின்ருர்,' என்பதைக் கேள்வியுற்ருள். அப்பொழுது, அக் கொடியவளுக்கு இராமர் சிறு வயதில் செய்த குறும்பு நினைவிற்கு வந்தது. உடனே அக் கூனி, கைகேயி யிடம் சென்ருள். அப்பொழுது கைகேயி மிக்க மகிழ்ச்சியுடன் இருந்தாள்.

மந்தரை யென்னும் பெயரையுடைய கூனி, கைகேயியைப் பார்த்து, "அம்மா, கௌசலை பாக்கியவதியாய் விட்டாள். நாளைத் தினம் இராமனுக்குப் பட்டாபிஷேகம் நடக்கப் போகின்றது," என்று கூறிஞள்.

மந்தரையின் மொழிகள் கைகேயிக்குப் பெரு மகிழ்ச்சியை யுண்டாக்கின. அப்பொழுது கைகேயி, மந்தரையைப் பார்த்து, "நீ எனக்கு நல்ல செய்தியைக் கொண்டுவந்து தெரிவித்த

மையால், யான் உனக்கு இம் முத்து மாலையை வெகுமதியாகக் கொடுக்கத் துணிகின்றேன்," என்று சொல்லி ஒரு சிறந்த முத்து மாலையை நீட்டினாள்.

கைகேயி யுரைத்த வார்த்தைகளைக் கேட்ட மந்தரையின் மனம் சிறிது நேரம் கொதித்தது. பின்பு, அம் மாது, கைகேயியைப் பார்த்து,

“அம்மா, நான் சொல்லுவதைக் கவனமாய்க் கேள். நான் உன்னுடைய நன்மையைக் கோருகின்றவள். இராமன் பட்டத்திற்கு வரின், கௌசலைக்குப் பலவகைப்பட்ட நன்மைகள் உண்டாகும். உனக்குப் பல தீமைகள் உண்டாகலாம். தசரதர் இக் காரியத்தில் வஞ்சகமாய் நடக்கின்ருர் என எனக்குத் தோன்றுகின்றது. ஆகையினுல் தான் அவர் இன்னும் உன்னிடம் வந்து இராமனது பட்டாபிஷேகத்தைச் சொல்லவில்லை. நீ இவைகளையெல்லாம் நன்ருய் ஆலோசித்துப் பார்,” என்று உரைத்தாள்.

மந்தரை சொல்லிய மொழிகளையெல்லாம் மிக்க பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த கைகேயி, அவ் வேலைக்காரியைப் பார்த்து, “நீ இப்பொழுது என்னையென்ன செய்யச் சொல்லுகின்ருய்?” என்ருள். அவ் வார்த்தைகளைக் கேட்ட மந்தரைக்கு அளவில்லாத ஆநந்தம் உண்டாயிற்று. பின்பு, அக் கொடியவள், புன்சிரிப்புடன் கைகேயியைப் பார்த்து, “தசரத மன்னர் சம்பராசுரனெடு யுத்தம் செய்த காலத்து, நீ அம் மன்னர்க்குச் செய்த வுதவியைக் கண்டு அவர் மன மகிழ்ந்து உனக்கு இரண்டு வரங்கள் கொடுத்திருக்கின்ருர். அவ் வரங்களை நீ இப்பொழுது அவரிடம் கேட்டுப் பெற்றுக் கொள். அவ் விரண்டு வரங்களில் ஒன்ருல் இராமன் காட்டில் பதினன்கு வருடம் வாசஞ் செய்யவேண்டுமென்றும், மற்ருென்ருல் பரதன் திருமுடி சூட்டப் பெறவேண்டும் என்றும் உன்னுடைய நாயகரிடம் சொல்லுக,” என்று உபாயங் கூறிச் சென்ருள்.

'பெண் புத்தி பின் புத்தி,' என்று சொல்லும் பழமொழியின்படிக் கைகேயியின் புத்தி மாறி விட்டது. உடனே கைகேயி தலை விரி கோலமாய் நகைகளை யெல்லாம் கழற்றி யெறிந்து விட்டுத் தரைமீது படுத்துக் கொண்டாள்.

ஐந்தாம் பிரிவு

தசரத மன்னர், இராமரது பட்டாபிஷேகத்தைக் கைகேயிக்குச் சொல்லுவதற்கு அவள் இருக்கும் அரண்மனைக்கு வந்தார். அவ்வரண்மனை பொலிவற்றிருந்தது. அவ்விடத்திலிருந்த வேலையாட்களின் முகங்கள் வாடி யிருந்தன. அக் குறிகளை யெல்லாங் கண்ட தசரதர் மனம் திடுக்கிட்டது. பின்பு, அவர், ஒருவாறு தேறிக் கைகேயி யிருக்கும் அறைக்குச் சென்றார்; தரை மீது படுத்துக் கிடக்கும் தம் மனைவியைக் கண்டார்; உடனே அம் மாதின் அருகு விரைந்து சென்றார்.

கைகேயி, தசரதரது வருகையை யுணர்ந்தும் உணராதவள் போல் இருந்தாள். தசரத மன்னர், கைகேயியை யெடுத்து, மார்பின்மீது சார்த்திக் கொண்டு, "என் அருமைக் காதலி, நீ விசன முற்றிருப்பதற்குக் காரணம் யாது? உனக்கு யாவரேனும் தீங்கு செய்தனரா? அல்லது யான் உன் மனம் வருந்தும்படி யாதேனும் செய்தேனா? உனக்கு யாது வேண்டும்?" என்று வினவினார்.

தேனினும் இனிய வார்த்தைகளைக் கூறின தசரத மன்னரைக் கைகேயி பார்த்து, “ தலைவரே, நான் விரும்புவதைக் கொடுப்பீரா? ” என்றாள். தசரதர், “ பெண்ணே, நீ நெடு நாள் என்னுடன்

பழகி யிருந்தும், என்னுடைய குணம் அறியாமல் இவ்வாறு கேட்டாய். நீ விரும்பிக் கேட்டதை நான் எப்பொழுதேனும் கொடாமலிருந்ததுண்டா? நீ இப்பொழுது விரும்புவது யாது? நீ கேட்கும் பொருளைக் கொடுக்கின்றேன் என்று இராமன்மேல் ஆணையிட்டுச் சொல்லுகின்றேன்," என்று உரைத்தார்.

தசரதர் சொல்லிய வார்த்தைகள் கைகேயிக்குப் பெரு மகிழ்ச்சியை யுண்டாக்கின. உடனே கைகேயி, தசரத மன்னரைப் பார்த்து, "என் பிராண நாயகரே, நீங்கள் முன்னொரு நாள் சம்பராசுரனொடு போர் புரிந்தீர். அப்பொழுது யான் உங்களுக்குச் செய்த உதவிக்கு நீங்கள் மனமகிழ்ந்து எனக்கு இரண்டு வரங்கள் கொடுத்தருளினீர். அவ்விரண்டு வரங்களை யான் இப்பொழுது விரும்புகின்றேன்," என்றாள்.

தசரத மன்னர், சிரித்த முகத்துடன் கைகேயியைப் பார்த்து, "பெண்ணே, இதற்குத் தானா இவ்வளவு வருத்தத்துடன் இருந்தாய்! உன் விருப்பத்தின்படியே அவ்விரண்டு வரங்களையும் இப்பொழுது நீ பெற்றுக்கொள்," என்றார்.

அப்பொழுது, கைகேயியின் முகம் அன்று அலர்ந்த செந்தாமரையைப் போல் விளங்கிற்று. அவ்வரசி, தான் எண்ணிய காரியம் முடிந்துவிடும் என்று நினைத்து அளவிலாத ஆநந்தமடைந்தாள். பின்பு, அம் மாதரசி, தசரத மன்னரை நோக்கி, "தலைவரே, என் விருப்பத்தின்படி நீங்கள் இப்பொழுது எனக்குக் கொடுக்கச் சம்மதித்துள்ள இரண்டு வரங்களில் ஒரு வரத்தால் பரதனுக்குப் பட்டாபிஷேகத்தைச்

செய்யுங்கள்; மற்ருெரு வரத்தால் இராமன் பதி ஞன்கு வருடம் காட்டில் வசிக்கும்படி கட்டளை யிட்டருளுஙங்கள்," என்ருள்.

கைகேயி கூறிய கடு மொழியைக் கேட்ட தசரதர், இடி யோசையைக் கேட்ட நாகம்போல் உடல் நடுங்கி, மனஞ் சோர்ந்து, தரைமேல் விழுந்தார்; சிறிது நேரம் ஒன்றுந் தோன்ருமல் திகைத் திருந்தார். பின்பு, அம் மன்னவர், கைகேயியைப் பார்த்து, "அடி பாவி, இராமனை நான் எப்படிக் காட்டிற் கனுப்புவேன். வேண்டு மாஞல், நான் பரதனுக்கே முடி சூட்டுகின்றேன். இராமனைக் காட்டிற்கு அனுப்பிவைக்கும்படி நீ மற்ருெரு முறை யென்னிடம் சொல்ல வேண்டா," என்று இரங்கிக் கூறிஞர்.

தசரதர் கூறிய வார்த்தைகளால் கைகேயி யின் மனம் சிறிதும் இரங்கவில்லை. அம்மாது தான் முதலில் கேட்ட வரங்களையே கொடுக்கும் படி தன் நாயகரை வற்புறுத்திஞள்.

கடைசியில் தசரத மன்னர், கைகேயியைப் பார்த்து, "என் உயிரை வாங்கப் பிறந்துள்ள கொடியவளே, நீ கேட்ட வரங்களுடன் என் உயி ரையும் கொடுத்தேன்," என்று சொல்லித் தரை மேல் சாய்ந்தார்.

தசரதர் மனஞ் சோர்ந்து மண்மீது சாய்ந்த பொழுது, அம் மன்னருக்குச் சிறந்த மந்திரியாகிய சுமந்திரன் என்பான் அவ்விடம் வந்தான். கைகேயி இராமரை அழைத்து வரும் படி அம் மந்திரிக்குக் கட்டளை யிட்டாள். அம் மந்திரி விரைந்து சென்று இராமரை யழைத்துக் கொண்டு வந்தான்.

உலகம் புகழும் இராமர் கைகேயியை வணங்கி நின்றார். கைகேயி இராமரைப் பார்த்து, "இராமா, உன் தந்தையார், பரதன் இந் நாட்டை யாளவேண்டு மென்றும், நீ பதினன்கு வருடம் காட்டில் வாழ வேண்டும் என்றும் கட்டளை யிட்டார்," என்று மனங் கூசாது மொழிந்தாள். அப்பொழுது இராமரது முகம் அன்றலர்ந்த தாமரை மலரைப் போல் பொலிவு பெற்றிருந்தது.

பின்பு, இராமர் கைகேயியைப் பார்த்து, "அன்னையீர், என்னுடைய தந்தையார் கட்டளையே யன்றி உம்முடைய கட்டளையாயிருப்பினும் யான் மறுப்பனோ? என்னுடைய தம்பி பெற்ற செல்வம் நான் பெற்ற செல்வமன்றோ? நான் போய் வருகிறேன்," என்று அவளை வணங்கிச் சென்றார்.

புதல்வரது பட்டாபிஷேகத்தைக் கண்டு மகிழ வேண்டு மென்றிருந்த கோசலையிடம் இராமர் சென்று தசரதரது கட்டளையைத் தெரிவித்தார். இராமர் கூறிய வார்த்தைகள் கோசலைக்குப் பெருந்துயர் விளைத்தன. அம் மாதரசி கோவெனக் கதறி நில மிசை வீழ்ந்தாள்.

இராமர் தம் தாயைப் பல இனிய மொழிகளால் தேற்றி, அவளிடம் உத்திரவு பெற்றுச் சுமித்திரையினிடம் சென்றார்; பின்பு தசரதர் தமக் கிட்ட கட்டளையை அவளிடமும் கூறினார். அம் மாதரசியும் கோசலை யடைந்த துன்பத்தை யடைந்தாள். இராமர் அவ் வரசியைப் பல இனிய மொழிகளால் தேற்றி, அவளிடம் விடை

பெற்று இலக்குமணனிடம் சென்று தாம் காட்டுக்குப் போக வேண்டி யிருப்பதைக் கூறினர்.

இலக்குமணன் இராமர்பால் பேரன்புடைய வன்; இராமருடைய சுக துக்கங்களைத் தனக்கு நேரிட்ட சுக துக்கங்கள் என்று எண்ணுவோன். ஆகையால், இராமர் தன்னை விட்டுப் பிரிய எண்ணுகிறார் என்பதை யுணர்ந்த இலக்குமணன், தமையனாரைப் பார்த்து, "நான் உம்மை விட்டுப் பிரிந்து அரைக் கணமேனும் உயிருடன் இரேன். நீங்கள் எங்குச் சென்றாலும் நான் உம்முடைய நிழல் போல் உம்மைத் தொடர்ந்து வருவேன்," என்று கூறினன்.

பின்பு, இராமர், இலக்குமணனுடன் சீதை யிருக்குமிடஞ் சென்று, தம் தந்தையாராகிய தசரதரின் கட்டளையைத் தெரிவித்தார். அப்பொழுது சீதை, இராமரைப் பார்த்து, "நாயகரே, நீங்கள் இருக்குமிடமே எனக்குப் போக பூமியாகும். ஆகையால், என்னையும் உம்முடன் கொண்டு செல்லும்," என்று வேண்டிக் கொண்டாள்.

பின்பு, இராமர் வசிட்டர் முதலிய பெரியோரிடம் விடை பெற்றுச் சுமந்திரன் கொண்டு வந்து நிறுத்திய தேர் மீது ஏறிக் கங்கைக் கரைக்கு வந்து சேர்ந்தார். பிறகு, சுமந்திரன், இராமர், இலக்குமணன், சீதையாகிய மூவரிடம் விடை பெற்று மிக்க வருத்தத்துடன் நகர் திரும்பினன். இராமனைப் பிரிந்த அயோத்தி மக்கள் அரு மணி யிழந்த நாகங்களே போல் துன்பக் கடலுள் ஆழ்ந்தனர்.

கங்கைக் கரையிலுள்ள சிருங்கிபேரம் என்னும் நாட்டிற்கு அரசனாகிய குகன் என்னும் வேடுவன் ஒருவன், இராமர் தந்தை சொல்லைத் தலை மேற்கொண்டு கானகஞ் செல்லக் கங்கைக் கரைக்கு வந்திருப்பதைக் கேள்வியுற்றான். உடனே அவ்வேடுவன் காற்றினுங் கடுகி வந்து இராமரைக் கண்டு வருந்தி நின்றான். இராமர் இனிய மொழிகளால் அவ் வேடுவனைத் தேற்றினார். பின்பு, அவ் வேடன் இராமர் இலக்குமணன், சீதையாகிய மூவரையும் தனது படகில் ஏற்றிக் கங்கையைக் கடக்கும் வண்ணஞ் செய்து அம் மூவரிடம் விடை பெற்றுச் சென்றான்.

ஆறாம் பிரிவு.

குகன் என்னும் ஒரு வேடனது உதவியால் இராமர், தம்பியுடனும் மனைவியுடனும் கங்கையைக் கடந்து சித்திரக் கூடம் என்னும் மலைக்கு அருகில் சில நாள் தங்கியிருந்தார். பின்பு, அவர் தண்டகாரணியம் புகுந்து பஞ்சவடிக்கு அருகில் இலக்குமணனால் அமைக்கப்பட்ட ஒரு பன்னசாலையில் சீதையுடன் மகிழ்ந்து சில நாள் வசித்து வந்தார்.

ஒரு நாள், இராவணனுடைய தங்கையாகிய சூர்ப்பணகை யென்பாள் இராமர் வசிக்கும் இடத்திற்கு வந்து இராமரைக் கண்டாள். இராமரது பேரழகு அவ்வரக்கியின் மனதைக் கொள்ளை கொண்டது. அவ்வரக்கி சிறிது நேரம் ஒன்றுந் தோன்றாமல் சித்திரப் பதுமை போல் அசைவற்று நின்றாள்.

இராமரது அழகைக் கண்டு மயங்காதவரும் உண்டோ? சூர்ப்பணகை, இராமரை எவ்விதத்திலாகிலும் மணந்து கொள்ள வேண்டு மென்று எண்ணினுள். ஆகையால், அவ்வரக்கி ஓர் அழகிய பெண் உருவங் கொண்டு இராமரிடஞ் சென்று தன்னுடைய எண்ணத்தைத் தெரிவித்தாள். இராமர் சூர்ப்பணகையைப் பார்த்து, "மாதே, நீ அரக்கியாயிருப்பதால் நான் உன்னைக் கலியாணம் செய்து கொள்ளுதல் தகுதியன்று," என அவள் மனம் வருந்தும்படி கூறினுர்.

இராமர் சொல்லிய கடு மொழியைக் கேட்ட சூர்ப்பணகை மனம் வருந்தித் தன் இருப்பிடஞ் சென்ருள். சீதை பக்கத்தில் இருப்பதால் இராமர் தன்னை விரும்பவில்லை யென்று அவ்வரக்கி நினைத்தாள். ஆதலால், அக் கொடியாள், மறுநாட் காலை இராமர் நீராடச் சென்றிருந்த பொழுது, சீதையை யணுகி, அம் மாதரசியைத் தூக்க முயன்ருள். அப்பொழுது அங்கு மறைந்து காவல் புரிந்து நின்ற இலக்குமணன், விரைந்தோடி வந்து, அவ் வரக்கியின் தலை மயிரைப் பிடித்திழுத்து, அவள் காதையும் மூக்கையும் வாளால் அறுத்துத் தள்ளினுன்.

காதையும் மூக்கையு மிழந்த சூர்ப்பணகை கூக்குரலுடன் அவ்வனத்திலிருந்த தன் சகோதரனுகிய கரன் என்னும் அரக்கனிடஞ் சென்று, இலக்குமணனது கொடுஞ் செய்கையைக் கூறினுள். கரன் உடனே கோபித்தெழுந்து, சேனைகளைக் கூட்டிக் கொண்டு சென்று இராமரை யெதிர்த்தான். இராமர், கரனையும் அவனுக்கு

உதவியாக வந்த ஆயிரக் கணக்கான அரக்கர்களை யும் இரண்டு நாழிகையில் எமனூர்க்கு அனுப்பி னர். சீதையும் இலக்குமணனும் இராமரது வீரச் செயலைக் கண்டு களித்தனர்.

போரில் கரன் மாண்டதைக் கண்ட சூர்ப் பணகை பெருந்துயரங் கொண்டாள். பின்பு அவ்வரக்கி யிடியுடன் செல்லும் கரு மேகமே போல் கதறிக் கொண்டு இலங்கைக்குச் சென்று இராவணன் பாதத்தில் வீழ்ந்தாள்.

சூர்ப்பணகையின் பரிதாப நிலையைக் கண்ட இராவணன், அவ்வரக்கியைப் பார்த்து, "தங் காய், உனக்கு இத் தீங்கு செய்த கொடியவன் யாவன்?" என இடி யிடித்ததுபோல் கேட்டான்.

சூர்ப்பணகை உண்மையை ஒளிக்க வேண்டு மென்று எண்ணி, "அண்ணா, தண்டகாரண்ணி யத்தில் இராமன், இலக்குமணன், சீதை என்னும் பெயருடைய மூவர் வந்திருக்கின்றனர். அம் மூவரில் சீதை யென்பாள் இராமனுடைய மனைவி. அம் மாது அழகில் திருமகளைக் காட்டிலும் சிறந்து விளங்குகின்றாள். நான் அவ்வழகிய பெண்ணைப் பார்த்த வுடனே அவள் உனக்கே தகுந்தவள் என்று எண்ணினேன். பின்பு ஒரு நாள் இராமன் இல்லாத சமயம் பார்த்துச் சென்று, அம் மாதரசியை உன்னிடம் கொண்டு வரத் தூக்கினேன். அப்பொழுது மறைந்து காவல் செய்து கொண்டிருந்த இலக்குமணன் விரைந்தோடி வந்து, என் காதையும் மூக்கையும் அறுத்துத் தள்ளினன்," என்று கண்ணீர் விட் டுக் கூறினள்.

121201

சூர்ப்பணகை, சீதையின் அழகை யெடுத்துச் சொன்ன உடனே, இராவணன் எவ்விதத்திலாகிலும் சீதையைப் பெற வேண்டுமென்று எண்ணினான். உடனே அவ்வரக்கன் தன்னுடைய தங்கைச் சூர்ப்பணகையைத் தேற்றிவிட்டு, மாரீசன் என்னும் ஓர் அரக்கனிடம் சென்று சூர்ப்பணகைக்கு நேர்ந்த அவமானத்தைச் சொன்னான்.

பின்பு, இராவணன், மாரீசனைப் பார்த்து, "என் மனம் சீதையை நாடுகின்றது. அம் மாதரசியை நான் எவ்விதத்திலாகிலும் கொண்டு வரவேண்டுமென்று எண்ணுகின்றேன். நீ அத் தொழிலில் எனக்கு உதவியாக இருக்கவேண்டும்," என்று கூறினான்.

மாரீசன் இராவணனுக்குப் பல நீதிகளை யெடுத்துக் கூறிச் சீதையை விரும்புவது தகாது என்றான். கேடு வருவதற்கு முன் புத்தி கெட்டு வருமாகையால் மாரீசன் சொல்லிய நீதிகளை இராவணன் எடுத்துக் கொள்ளவில்லை.

பின்பு, மாரீசன், இராவணனைப் பார்த்து, "நான் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?" என்றான். இராவணன், "நீ அழகிற் சிறந்த பொன்மான் உருக்கொண்டு சீதை யிருக்குமிடம் செல்ல வேண்டும்," என்று கட்டளை யிட்டுச் சென்றான்.

இராவணன் இட்ட கட்டளையின்படி மாரீசன் என்னும் அரக்கன் பொன் மான் உருவு கொண்டு சீதையின் முன் சென்றான். சீதை அவ்வழகிய மானைப் பிடித்துத் தரும்படி இராமரைக் கேட்டாள். சீதை விரும்பிய வண்ணம் அப் பொன் மானைப் பிடிக்க இராமர் சென்றார்.

அப்பொழுது இலக்குமணன், இராமரைப் பார்த்து, "அண்ணு, இது மாய மான் என நான் எண்ணுகின்றேன். ஆகையால், இம்மான் நமக்கு வேண்டா," என்று தடுத்தான்.

இராமர், தம்பியின் சொல்லைக் கேளாமல் பொன் மானைப் பிடிக்கச் சென்ருர். அம் மான் இராமரை ஏமாற்றிக் கொண்டே நெடுந்தூரஞ் சென்றது. பின்பு, இராமர் ஓர் அம்பை விட்டு அம் மாயமானைக் கொன்ருர். அம் மான் இராமர் கூவுவது போல் கூவி உயிர் விட்டது. அக் குரலைக் கேட்ட சீதை இராமருக்குத் துன்பும் நேர்ந்தது என்றெண்ணி, அக் கூக்குரல் வந்த வழியே போய்ப் பார்க்கும்படி இலக்குமணனை வேண்டினுள். இலக்குமணன் சீதையை நோக்கி, "அன்னையே, இராமருக்கு யாதொரு துன்பமும் உண்டாகாது," என்ருன். சீதை, இலக்குமணன் கூறியதைக் கேளாமல் தான் தீயில் இறங்கி விடுவதாகக் கூறினுள். பின்பு, இலக்குமணன் பழிக் கஞ்சி இராமரைத் தேடிச் சென்ருன்.

இலக்குமணனும் சீதையை விட்டகன்ருன் என்பதை யறிந்த இராவணன், துறவி வேடங் கொண்டு சீதையிடம் வந்து, மண்ணுடன் அம் மாதரசியைத் தூக்கிச் சென்று இலங்கையிலுள்ள ஓர் அசோக வனத்தில் பல அரக்கியர் காவலில் வைத்தான்.

ஏழாம் பிரிவு.

சீதையைத் தனியே விட்டு வந்த இலக்குமணனை இராமர் கண்டு, தம்பி யவ்வாறு வந்ததின் காரணம் அறிந்து பெரிதும் வருந்தினர். உடனே இராம இலக்குமணர் தமது இருப்பிடம் விரைந்து வந்து சீதையைத் தேடினர். அங்குச் சீதை யில்லாதிருந்தமையால் அவ்விருவரும் பெருந்துயர் அடைந்தனர்.

பின்பு, இராம இலக்குமணர் சீதையைப் பல விடங்களிலும் தேடி இருசியமூக மலைக்கு வந்தனர். சுக்கிரீவன் என்னும் வானர மன்னன் ஒருவன் தன்னுடைய தமையனாகிய வாலியால் அடித்துத் துரத்தப்பட்டமையால் அம்மலையில் அநுமார் முதலிய சில வானரர்களுடன் வசித்து வந்தான்.

இராமர் அம் மலைக்குச் சென்றவுடன் அறிவிற் சிறந்த அநுமாரது நட்பைப் பெற்றார். பின்பு, வாலியின் கொடுஞ் செயல்களை அநுமாரால் உணர்ந்த இராமர் வாலியைக் கொன்று சுக்ரீவனுக்குப் பட்டங் கட்டினார்.

சில நாட்களுக்குப் பிறகு சுக்ரீவன் வானரப் படைகளைக் கூட்டிச் சீதையைத் தேடும்படி பல திசைகளில் அனுப்பினான். அப்படி யனுப்பப் பட்டவர்களுள் ஒருவர் அநுமார் என்பவர். அவர் தென்திசைக்குப் போகும்படி கட்டளை பெற்றனர்.

இராமர் அநுமாரிடம் தமது கணையாழியை அடையாளத்திற்காகக் கொடுத்தனுப்பினர். அநுமார் கடலைக் கடந்து இலங்கைக்குச்சென்று

பல இடங்களிலும் சீதையைத் தேடினர்; பின்பு, அசோக வனத்தில் பல அரக்கிகள் நடுவில் சீதையைக் கண்டார். அப்பொழுது அங்கு இராவணன் வந்தான்.

இராவணனைக் கண்ட அநுமார் அவன் என்ன செய்கின்றான் என்பதைக் காண ஓரிடத்தில் மறைந்திருந்தார். அப்பொழுது இராவணன் சீதையிடம் பல இனிய மொழிகள் கூறினான். கற்பரசியாய் விளங்கும் சீதை இராவணனை ஒரு துரும்பென மதித்து இழித்துப் பேசினாள். அப்பொழுது, கொடிய எண்ணமுள்ள இராவணன் வெகுண்டு, "இரண்டு மாதத்திற்குள் நீ என்னை மணந்துகொள்ளாவிடின், என் வாளுக்கு உன்னை இரை யாக்குவேன்," எனக் கடிந்து கூறிச் சென்றான்.

இராவணன் சென்ற பின், சீதை தன் உயிரை விட்டுவிடுதற்குத் துணிந்து, மரங்கள் அடர்ந்துள்ள ஒரு சோலைக்குச் சென்றாள். அநுமார் இராம நாமத்தை யுரைத்துக் கொண்டே சீதையைத் தொடர்ந்து சென்று, அவ்வுத்தமியின் திருவடியில் வீழ்ந்து வணங்கினார்; இராமர் தம்மிடம் சொல்லி யனுப்பிய அடையாள மொழிகளை யெல்லாம் சொல்லி அவர் கொடுத்த கணையாழியையும் அம் மாதரசியிடம் கொடுத்தார்.

இராமரது கணையாழியைக் கண்ட சீதை இழந்த கண்ணைப் பெற்றவள் போல் அளவிலாத ஆநந்த மடைந்தாள்; அக் கணையாழியை இரு கண்களிலும் ஒத்தி முத்த மிட்டாள். பின்பு மங்கையர்க் கரசியாய் விளங்கும் சீதை, "என் ஆருயிர்த் தலைவர் ஒரு மாதத்திற்குள் வந்து

என்னை யழைத்துச் செல்லா விடின், என் உயிர் நீங்கி விடும்,'' என்று கூறித் தனது சூடா மணியை அடையாளத்திற்காக இராமரிடம் கொடுக்கும்படி அநுமாருக்குக் கொடுத்தாள்.

பிறகு அநுமார் சீதையிடம் விடை பெற்றுத் தாம் வந்து போவதை இராவணனுக்கு உணர்த் தும் பொருட்டுச் சோலைகளை யெல்லாம் அழிக் கத் தொடங்கினர். அநுமார் செய்யும் கொடுந் தொழிலைக் கண்ட அரக்கர், கூக்குரலிட்டுச் சென்று சோலையின் அழிவை இராவணனுக்குத் தெரி வித்தனர். இராவணன் வெகுண்டு அநுமாரைப் பற்றி யிழுத்து வரும்படி பல அரக்கரை யனுப் பினன்.

அறிவிற் சிறந்து விளங்கும் அநுமாரைப் பற்றிச் செல்ல வந்த அரக்க ரெல்லாம் அவ் வானரரால் அடியுண்டு எமனூர் சென்றனர். கடைசியில் இரர்வணனுடைய முதல் மைந்த னகிய இந்திரசித்து என்பான் பிரம்மாத்திரத்தை விட்டு அநுமாரைக் கட்டிக் கொண்டு வந்து இராவணன் முன் விட்டான்.

இராவணன் அநுமாரைக் கனலெழ நோக்கி, "நீ யார்?" என்றான். அநுமார் இராவணனை நோக்கிப் புன்னகை புரிந்து, "நான் இராம ருடைய தூதன். உனக்கு நற்புத்தி புகட்ட வந்தேன்," என்றார். அம் மொழிகளைக் கேட்ட இராவணன் சினந்து, அருகில் இருந்த அரக்கர் களை நோக்கி, "இக் குரங்கைக் கொன்று விடுங் கள்," என்று கட்டளையிட்டான். அப்பொழுது இராவணனுக்கு இளையவராகிய விபீஷணர் என்பார், "தூதராக வந்தவரைக் கொல்லுதல்

தகாது," என்று சொன்னார். அதன் பின்பு, இராவணன், அநுமாரின் வாலில் துணியைச் சுற்றிக் கொளுத்திவிடும்படி கட்டளையிட்டான்.

இராவணன் கட்டளையைப் பெற்ற அரக்கர் பலர் அநுமாரின் வாலில் துணியைச் சுற்றிக் கொளுத்திவிட்டனர். அநுமார் வானத்திற் கிளம்பி தமது வாலின் தீயால் சீதை யிருக்கும் இடத்தை மாத்திரம் விட்டு இலங்கை முழுவதை யும் கொளுத்திவிட்டார். அத் தீயால் அரக்கர் பலர் மாண்டனர்; பல அரண்மனைகளும் அழகிய கட்டிடங்களும் அழிந்தொழிந்தன.

அநுமார் இலங்கையைக் கொளுத்திய பின்பு, தமது வாலைக் கடலில் தோய்த்து, ஆகாய வழியாய்ச் சென்று, இராமரை வணங்கித் தாம் சீதையைக் கண்டது முதல் இலங்கையைத் தீக்கு இரையாக்கியது வரைக்கும் நடந்தவற்றை யெல் லாம் சொல்லிச் சீதை கொடுத்த சூடாமணியை அவரிடம் கொடுத்தார்.

இராமர் சூடாமணியைக் கண்டு கரை கடந்த களிப்படைந்தார். பின்பு, அவ்வுத்தமர், இலங் கைக்குச் செல்ல வானரப் படைகளுடன், தென் கடல் வந்து சேர்ந்தார்.

எட்டாம் பிரிவு.

இலங்கையில் இராவணன் ஒரு சபை கூட்டினுன். அச் சபையில் பலர் வந்து சேர்ந்தனர். இராவணன் ஒவ்வொருவருடைய கருத்தையும் வினவி வந்தான். அப்பொழுது விபீஷணர் எழுந்து இராவணனது செய்கை சிறிதும் தகுதியுடையதன்று என்று பல காரணங்களைக் காட்டிக் கூறினுர். அம்மொழிகளைக் கேட்ட இராவணன், விபீஷணர் தனது நாட்டில் இருத்தல் கூடாது என்று கட்டளையிட்டான்.

பின்பு, விபீஷணர் தென்கடலில் வானரப் படைகளுடன் வந்திருந்த இராமரிடம் வந்து சரண் புகுந்தார். உடனே இராமர் விபீஷணருக்கு முடி சூட்டி அவருக்கு இலங்கையை உரியதாக்கினுர்.

பின்பு, இராமர், வானரப் படைகள் கொண்டு வந்து கொடுத்த மலையால் அணை கட்டுவித்து, அநுமார் முதலிய பல வானரருடன் அவ்வணையின் வழியே சென்று இலங்கையைச் சேர்ந்து, இராவணன் முதலிய பல அரக்கரையும் கொன்றுர். பின்பு விபீஷணர் இலங்கைக்கு அரசராஞர்.

பிறகு, இராமர் கட்டளையின்படி விபீஷணர் சென்று, சில பெண்களைக் கொண்டு சீதையை அலங்கரிப்பித்து அழைத்து வந்தார். சீதை தன் கற்பைப் பலர்க்கும் காட்டும் பொருட்டுத் தீயிற் குளித்து இராமரிடம் வந்தாள். இராமர் முதலிய பலரும் சீதையின் கற்பைக் கண்டு வியந்தனர்.

பின்பு, இராமர் பலருடன் தெய்வீகத் தன்மை வாய்ந்த புட்பக விமானம் ஒன்றில் அமர்ந்து அயோத்தி சேர்ந்தார். இராமரைக் கண்ட அயோத்தி மக்கள் இழந்த பொருளைக் கண்டெடுத்தவரியவர்.போல் ஆநந்தக் கடலுள் ஆழ்ந்தார்கள். பின்பு, ஒரு நல்ல நாளில் வசிட்டர் இராமருக்குத் திருமுடி சூட்டினர். உலகம் மகிழ்ந்தது.

ஸ்ரீ

புத்தர்

புண்ணிய கண்டம் எனப் பலராலும் புகழப் பெற்றுள்ள பரத கண்டத்தில் உத்தர கோசல நாடு ஒன்று இருந்தது. அந் நாட்டில் கபில புரம் என்னும் நகர் ஒன்று பல வளங்களுடன் கூடிச் செழித்தோங்கி யிருந்தது. அவ் வழகிய நகரைச் சற்றேறக் குறைய இரண்டாயிரத்து ஐந் நூறு ஆண்டுகளுக்கு முன்பு சுத்தோதனன் என்னும் செங்கோல் மன்னன் ஆண்டு வந்தான்.

நீதி வழுவாது அரசு புரிந்து வந்த சுத்தோதனனுக்கு மாயா தேவி யென்றும் கௌதமி யென்றும் இரண்டு மனைவிமார் இருந்தனர். அவ்விருவருள் மாயாதேவி மூத்தவள்; நல்ல குணமுடையவள்; கணவன் குறிப்பறிந்து நடப்பவள். கௌதமி நற்குண மங்கை யல்லள். ஆகையால், சுத்தோதனன் மாயா தேவியையே பெரிதும் நேசித்து வந்தான்.

சுத்தோதனன் நீண்ட நாள் வரைக்கும் குழந்தை யில்லாமல் மனம் வருந்தி யிருந்தான். அவன் மனைவிமாரும் பிள்ளை யில்லாக் குறையால் வருந்தி வந்தனர். பின்பு, மாயாதேவி தான் செய்த தவப் பயனால் உலகம் புகழும் உத்தமர் ஒருவரை வைகாசி மாதத்தில் வெள்ளிக் கிழமை யில் நல்ல வேளையில் ஈன்றாள். அப்பொழுது பல நற்குறிகள் நிகழ்ந்தன.

குழந்தை பிறந்த குதூகலத்தால் சுத்தோதனன் பலர்க்குப் பலவகைப் பொருள்களை யுதவினன். அந் நகர மக்கள் அனைவரும் அரசனுடன் ஆநந்தக் கடலுள் ஆழ்ந்தனர்.

குழந்தை பிறந்த ஏழா நாளில் மாயா தேவி மகிழ்ச்சியின் பெருக்கால் மரண மடைந்தாள். சுத்தோதனன் தன் ஆருயிர் மனைவியை நினைந்து சில நாள் வருந்தி வந்தான். பின்பு, அம்மன்

னன் புத்திரக் களிப்பால் மாயா தேவியை மறந்தான். கௌதமி தனது நிய குணத்தினின்றும் நீங்கி மாயா தேவியின் குழந்தையைத் தன் அருமைக் குழந்தையே போல் எண்ணி வளர்த்து வந்தாள்.

சுத்தோதனன் பெரியோரைக் கொண்டு தன் குழந்தைக்குச் சித்தார்த்தர் என்னும் பெயரிட்டான். பின்பு, மித்திரர் என்னும் அந்தணரிடத்துச் சித்தார்த்தர் பல கலைகளையும் கற்றுணர்ந்தார். அவர் இளமைப் பருவத்தி லிருந்தே அருள், அன்பு முதலிய அருமைக் குணங்களைப் பெற்று விளங்கினர். அவருடைய நன்னடக்கையைக் கண்ட சுத்தோதனன் கரை கடந்த களிப்படைந்தான்.

இரண்டாம் பிரிவு

ஒரு நாள் சுத்தோதனன் தன்னுடைய அருமைப் புதல்வராகிய சித்தார்த்தருடன் பேசிக் கொண்டிருக்கையில், அசிதர் என்னும் முனிவர் அங்கு வந்தார். அப் பெரியார், சித்தார்த்தரின் அங்க அமைப்புகளையும், சக்கர இரேகைகளையுங் கண்டு, சுத்தோதனனை நோக்கி, "மா நிலங் காக்கும் மன்ன, நீ முற்பிறவியில் செய்துள்ள தவப் பயனால் உனக்கு மைந்தனாகத் தோன்றியுள்ள இச் சிறுவன் இவ்வுலக இன்பத்தை வெறுத்துத் துறவு பூண்டு, மக்களுக்கு நீதி மொழிகளை யுபதேசித்து, இவ்வுலகில் பேராசிரியனாக விளங்குவான்," என்று சொல்லி விட்டுச் சென்றார்.

அன்று முதல் சுத்தோதனன், சித்தார்த்தருக்கு உலக வாழ்வில் வெறுப்புண்டாகா வண்ணம் பல காரியங்களைச் செய்து வந்தான். பின்பு, சுத்தோதனன், சித்தார்த்தரை, அவரது பதினைந்தாம் ஆண்டில் இளவரசராக்கினான்.

சித்தார்த்தர் இளவரசராக இருந்து பல ஆண்டுகளைக் கழித்து வந்தார். பின்பு, சுத்தோதனன் தன் புதல்வர் கலியாணப் பருவமடைந்ததைக் கண்டு, தன் மைத்துனன் மகளாகிய யசோதரையை அவர்க்கு மணம் புரிவித்தான். சித்தார்த்தர் தம் மனைவியோடு கூடிச் சில நாள் இன்புற்று வாழ்ந்து வந்தார்.

சுத்தோதனன் ஓர் அழகிய பூந்தோட்டத்தில் சித்தார்த்தர் வசிப்பதற்காக மூன்று சிறந்த மாளிகைகள் கட்டுவித்தான்; அத் தோட்டத்தில் இன்பத்தைக்கொடுக்கும் பொருள்களையே நிரப்பினான். சித்தார்த்தர், கோடைக் காலம், மழைக் காலம், பனிக் காலமாகிய மூன்று காலங்களில் ஒவ்வொரு காலத்தை ஒவ்வொரு மாளிகையிலிருந்து கழித்து வந்தார். அவர் அப் பூந்தோட்டத்து மாளிகைகளில் வசித்து வந்த வரைக்கும் பிணி, மூப்பு, மரணம் என்பவற்றின் கொடுமைகளை யறியவில்லை.

ஒரு நாள், சுத்தோதனன் தன்னை வந்து காணும்படி சித்தார்த்தருக்குக் கடிதம் போக்கினான். சித்தார்த்தர், தந்தை விரும்பிய வண்ணம் தேர் ஏறிச் சுத்தோதனனைக் காணச் சென்றார். அவ்வரச குமரர், செல்லும் வழியில் பிணியால் மிக வருந்திக் கொண்டிருந்த ஒருவனைக் கண்டார். அப்பொழுது அவர் மனம் அனலில்

இட்ட மெழுகைப்போல் இளகியது. அந்த அறிஞர் அந்த இடத்திலேயே நின்று, 'இவ் வுலகில் பிறந்துள்ள ஒவ்வொருவரும் இப் படித்தான் நோயால் வருந்தவேண்டும்போலும்,' என்று தமக்குள்ளே .யெண்ணிப் பெரிதும் வருந்தினர்.

சித்தார்த்தர், ஒரு நாள் வெளியே சென்ற பொழுது, நடப்பதற்கும் முடியாமல் வருந்திக் கொண்டிருந்த ஒரு கிழவனைக் கண்டார். அக் காலை அவர் வெய்யிலால் துடிக்கும் புழுவைப் போல் துடிதுடித்தார். பின்பு, அவ் வுத்தமர், 'இவ் வுலகிலுள்ள ஒவ்வொருவரும் முடிவில் இப்படித்தான் மூப்பால் வருந்த வேண்டும் போலும்,' என்று எண்ணிப் பெருந் துயர் அடைந்தார்.

சித்தார்த்தர் மற்றொரு நாள் வெளியிலுள்ள விநோதங்களைக் காணச் சென்றிருந்த பொழுது, அழுகிய பிணம் ஒன்று அவர் கண்ணிற் பட்டது. அதனைக் கண்ட சித்தார்த்தர், 'அழகுடன் விளங் கும் எல்லா வுடம்புகளும் இந்நிலையைத்தான் அடைய வேண்டும் போலும்,' என்று எண்ணித் துன்புற்றார்.

ஒரு நாள், சித்தார்த்தர் பூஞ்சோலைகளைக் காண வேண்டு மென்று வெளியே சென்றிருந்த பொழுது, வயல்களில் உழவர்களும் மாடுகளும் மெய் வருந்த வேலை செய்து கொண்டிருந்ததைக் கண்டு மனம் வருந்தி நின்றார். பின்பு, அவர் ஒரு நாவல் மரத்தின் கீழே யிருந்து கண்களை மூடிக் கொண்டு, பிணி, மூப்பு, இறப்பு முதலிய வற்றை நீக்கி, என்றும் ஆநந்தமாயிருக்கும்

நிலையை யடையும் வழியைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது அங்கு ஒரு முனிவர் வந்து, 'சித்தார்த்த,' என்று கூப்பிட்டார். உடனே சித்தார்த்தர் கண்களை விழித்து, அம் முனிவரை நோக்கி, "பெரியீர், நீர் யார்?" என்று கேட்டார். அம் முனிவர், சித்தார்த்தரைக் கருணையோடு பார்த்து, "ஐய, யான் ஒரு துறவி; பிறப்பின் துன்பத்தை நினைந்து என்றுங் கெடாத இன்ப நிலையை யடைய விரும்பி, எல்லாப் பற்றுக்களையுந் துறந்து, இரந்துண்டு வாழும் இந் நிலையடைந்தேன்," என்று கூறியதுடன் துறவிகளின் பெருமைகளையும் எடுத்துக் கூறிச் சென்றார்.

முனிவரின் வாய் மொழிகளைக் கேட்ட சித்தார்த்தர் எல்லாப் பொருள்களையும் விட்டகன்று துறவியாக வேண்டுமென்று உறுதியாய் எண்ணினார். பின்பு, அவர் தம் தந்தையாகிய சுத்தோதனனிடஞ் சென்று தமது கருத்தை வெளியிட்டார். புதல்வரின் கருத்தைக் கேட்ட சுத்தோதனன் துன்பக் கடலுள் ஆழ்ந்தான். பின்பு, அம் மன்னவன் சித்தார்த்தரைப் பார்த்து, "புதல்வ, துறவியாவதற்கு இது காலமன்று," என்று மிக்க வருத்தத்துடன் கூறினான்.

அப்பொழுது, சித்தார்த்தர் தம்முடைய தந்தையை நோக்கி, "தந்தையீர், எனது மனம் பெருங் கலக்க மடைந்துள்ளது. பிணி, மூப்பு, மரணம் என்னும் இம்மூன்றினின்றும் நீங்கி, என்றும் அழியாத இன்பத்தை யடையும் வழியை யான் கண்டு பிடிக்கும் வரைக்கும் என் மனம்

ஒரு நிலையில் நில்லாது," என்று கூறிவிட்டுத் தமது இருப்பிடம் சென்றார்.

பின்பு, சுத்தோதனன் தன்னுடைய மைந்தரது மன நிலையை மாற்றுவதற்காகப் பல வகையில் முயன்றான். அம் மன்னனுடைய முயற்சிகள் யாவும் பயனற்றுப் போயின.

சில நாட்கள் சென்ற பின்பு, சித்தார்த்தரின் மனைவியாகிய யசோதரை யென்பாள் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். குழந்தை பிறந்ததைக் கேட்டு அநேகர் ஆநந்தங் கொண்டனர். ஆனால் சித்தார்த்தர் மாத்திரம் மைந்தன் பிறந்தான் என்று மகிழ்ச்சி யடைய வில்லை.

சித்தார்த்தர் தமக்குக் குழந்தை பிறந்த அன்றைத் தினத்து நடு இரவிலேயே உலகைத் துறக்கத் துணிந்தார். பின்பு, அவர் அந் நாள் நள்ளிரவில் ஒருவருக்கும் தெரியாமல் மெல்ல எழுந்து வெளியே வந்தார். 'கடந்துளோர்களும் கடப்பரோ மக்கள் மேல் காதல்,' என்னும் பழமொழியின்படிச் சித்தார்த்தருக்குத் தம் குழந்தையைக் கடைசி முறை காணவேண்டும் என்ற எண்ணம் உதித்தது. உடனே யவர், யசோதரை படுத்துத் தூங்கும் அறைக்குள் அடிமேல் அடி வைத்துச் சென்றார். அப்பொழுது யசோதரை, குழந்தையை மார்போடணைத்துக் கொண்டு அயர்ந்து நித்திரை செய்து கொண்டிருந்தாள். சித்தார்த்தர் தம்முடைய அருமை மனைவியையும் குழந்தையையும் அன்போடு சிறிது நேரம் உற்று நோக்கி நின்றார். பின்பு, அவர் ஒருவாறு மனத்தைத் தம் வயமாக்கி, 'நம்முடைய மனைவிக்கும் புதல்வனுக்கும் நாமே ஞானாசிரியராக வருதலும்

கூடும்,' என்று தமக்குள்ளேயே யெண்ணிக் கொண்டு அவ்வறையை விட்டு வெளியே சென்றார்.

அப்பொழுது, சித்தார்த்தர் சந்தகன் என்பான் விழித்துக் கொண்டிருத்தலைக் கண்டார். பின்பு, அவ்வரச குமரர் சந்தகனை நோக்கிக் கண்டக மென்னும் தம்முடைய குதிரையை விரைவிற் கொண்டு வரும்படி கட்டளை யிட்டார். உடனே சந்தகன் குதிரையைக் கொண்டு வந்து நிறுத்தினான். சித்தார்த்தர் அக் குதிரையின் மேல் ஏறிய வுடனே அக் குதிரை காற்றினும் விரைந்து சென்றது. சந்தகன் சித்தார்த்தரைப் பின் பற்றிச் சென்றான்.

மூன்றாம் பிரிவு

கண்டகம் என்னும் குதிரையின் மேல் ஏறி விரைந்து சென்ற சித்தார்த்தர், சூரியன் உதிப்பதற்கு முன்பு, ஒரு நதிக் கரையை யடைந்தார். பின்பு, அவர் குதிரையிலிருந்து இறங்கி, தமது கழுத்திலிருந்த கண்டசரம் ஒன்றை யெடுத்துச் சந்தகனுக்கு நன்கொடையாகக் கொடுத்தார்; பின்பு தமது மணி முடியை யெடுத்துச் சந்தகன் கையில் கொடுத்து, "ஐய, இதனைக் கொண்டு போய் என் தந்தையாரிடம் கொடுத்து என் மேல் அவர் கொண்டுள்ள அன்பை மறந்து விடும்படி சொல்லுக," என்று இனிய சொற்களைக் கூறி யவனை யனுப்பினார்.

பின்பு, சித்தார்த்தர் வாளால் தமது தலை மயிரை அறுத்தெறிந்தார். அப்பொழுது அங்கு ஒரு வேடுவன் வந்தான். அவ் வேடனைக் கண்டவுடனே சித்தார்த்தர் தம்முடைய ஆடைகளை யெல்லாம் களைந்து அவனுக்குக் கொடுத்து விட்டு அவனுடைய ஆடைகளை வாங்கித் தாம் அணிந்துகொண்டார்.

பின்பு, சித்தார்த்தர் பல துறவிகளைக் கண்டு தமது சந்தேகத்தைக் கேட்டார். அவர்கள் கூறிய விடைகளால் சித்தார்த்தர் திருப்தி யடைய வில்லை. பின்பு, அவர் கயா என்னும் இடத்தில் ஓர் அரசமரத்தடியில் உட்கார்ந்து இருபத்தெட்டு நாள் வரைக்கும் உண்மைப் பொருளை ஆராய்ந்து கொண்டிருந்தார். இருபத்தொன்பதா நாள் இரவில் பழம் பிறப்புணர்ச்சியும் தத்துவ ஞானமும் அப்பெரியார்க்கு உண்டாயின. அப்பொழுது முற்பிறப்பில் தீவினை செய்தோர் இப்பிறப்பில் துன்பக் கடலுள் மூழ்குதலையும், உயிர்களிடத்து இரக்க முள்ளோர் உயர்ந்த நிலையில் இருத்தலையும் அவர் ஞானக் கண்ணால் பார்த்தார்.

சித்தார்த்தர்க்கு உண்மை யறிவு உதித்த பின்பு, புத்தர் என்னும்காரணப் பெயர் வழங்கி வந்தது. ஒரு நாள் பிரம்ம தேவர் புத்தர் முன் தோன்றி, " அறிவிற் சிறந்த ஐய, பலவகைப் பட்ட கவலையால் துன்புறும் மக்களைக் கண்டு மனமிரங்கு. உலகினர் தமக்கெனவே வாழ்கின்றனர். அன்னோரது தாழ்ந்த நோக்கத்தை யொழித்து அவர்களுக்கு நற்போதனைகளைப் புகட்டு, " என்று கட்டளை யிட்டு மறைந்தார்.

பிரம்மதேவர் இட்ட கட்டளையின் படியே புத்தர் பல இடம் சென்று மக்களின் மனம் உருகும் வண்ணம் நல்லுபதேசங்கள் செய்து வந்தார். புத்தரின் நல்லுரையைக் கேட்டு நற்கதியடைந்தோர் பலர்; ஆசையை யகற்றி யறவழி நின்றோர் பலர்; இல்லைத் துறந்து இன்பமடைந்தோர் பலர்.

புத்தரின் கொள்கைகள்:—இவ்வுலகம் துன்பம் நிரம்பியது; மக்கள் அத் துன்பத்துள் ஆழ்ந்து வருந்துவதற்குக் காரணம் ஆசை யென்னும் பேய்க்கு அவர்கள் அடிமைப் பட்டு வாழ்தலே. துக்கத்தைப் போக்கும் வழி உலகப்பொருள்களில் ஆசையற்றிருத்தலே. சீடர் ஞானசாரியரின் வாக்கையும் கலைகளையும் நம்ப வேண்டும். உலகிலுள்ள ஒவ்வொருவரும் உயர்ந்த நோக்கம் உடையவராய் இருத்தல் வேண்டும். மக்கள் எப்பொழுதும் இன் சொல்லினராய் இருக்க வேண்டும்; துன்பம் வந்த காலத்தும் நன்னெறியிலிருந்து வழுவாதிருக்க வேண்டும்; ஒவ்வொரு நாளிலும் சிறிது நேரமாவது எல்லாம் வல்ல இறைவரின் திருவடிகளில் மனத்தை யிறுத்த வேண்டும்; எல்லா உயிர்களிடத்தும் பெருங் கருணை யுடையவராய் வாழ வேண்டும்.

பேரறிவாளராகிய புத்தர் எண்பது வயது வரைக்கும் உலகிற்குப் பல நன்மைகளைச் செய்து கொண்டிருந்து அவ்வாண்டிலேயே குசீ நகரத்தில் துக்க நீக்கமும் பரமானந்தத் தோற்றமுமாகிய வீட்டினை யடைந்தார். அப்பொழுது உலகனைத்தும் பெருந்துயர் அடைந்தது. புத்த

ரின் சாம்பலை யுள்ளிட்டுப் பற்பலர் பல திருக் கோயில்கள் கட்டுவித்தனர்.

புத்த மதத்தை யின்றும் இலங்கையிலுள்ளோரும், சீன தேசத்தினரும், பர்மா தேசத்தவரும், ஜப்பானியரும் பின்பற்றி வாழ்கின்றனர். அம் மதம் சிறந்த மதங்கள் எனச் சிறப்பித்துக் கூறப் பெறும் பல மதங்களுள் ஒன்றாய்த் திகழ்கின்றது.

121201

PENROSE & Co., PRINTERS, 19, Sunkurama Chetty St., G. T., Madras.

எலிமெண்டரி பாடசாலை மாணவர்களுக்கு
உபயோகமான புத்தகங்கள்

* (இக்குறியுள்ள புத்தகங்கள் துரைத்தனத்தாரால்
அங்கீகாரம் பெற்றவை.)

சிறு கதைத்திரள் :—	ரூ.	அ.	ப.
* முதற் புத்தகம்	0	2	0
* இரண்டாம் புத்தகம்	0	2	6
* மூன்றாம் புத்தகம்	0	3	0
* பால விநோதக் கதைகள்	0	4	0
பலதேசக் கட்டுக் கதைகள் :—			
* முதற் புத்தகம்	0	4	0
* இரண்டாம் புத்தகம்	0	5	0
* மூன்று பெண்மணிகள் சரிதை	0	4	0
* மூன்று பால பக்தர்கள் சரிதை	0	6	0
* இந்திய கற்பரசிகள் சரிதை	0	4	0
நீதிக் கதைக் கோத்து :—			
* முதற் புத்தகம்	0	4	0
* இரண்டாம் புத்தகம்	0	5	0
* மூன்றாம் புத்தகம்	0	5	0
* கின்டர் கார்டன் பாட்டுகள்	0	3	0
* இலக்கணப் பாடங்கள் (படங்களுடன்) ...	0	5	0
* சிற்றிலக்கணம்	0	3	0
இந்துதேச சரித்திரக் கதைகள் :—			
* முதற் புத்தகம்	0	6	0
* நவீன கணிதம் :—(மலர் 1)	0	6	0
* பாலர் ஸிவிக்ஸ்	0	5	0

இந்தியன் பப்ளிஷிங் ஹவுஸ் லிமிடெட்
சுங்குராம செட்டி தெரு, சென்னை.

Printed by Penrose & Co., 19, Sunkurama Chetty Street, G. T., Madras.